TAMIL

# The Spoken Word

by

WILLIAM MARRION BRANHAM

# ஸ்திரீயின் தலைமுக்காடு

ஏழாம் தூதன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”

# இயேசுவே வாரும்

**ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்** வெளி. 22:20

**சகோ. காலேப் யோசுவா** "ஓரேப்"

**ஸ்ரீவைகுண்டம் – 628601**

**வ.உ.சி. மாவட்டம்**

## ஸ்திரீயின் தலைமுக்காடு

*1. தேவனுடைய சித்தத்தினாலே, பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற் காகவும், சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்ட நான், கிறிஸ்து இயேசு வுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்களாயும் இருக்கிற தேவனுடைய சபைக்கு எழுதுகிறதாவது:*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டா வதாக.*

*2. நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரம் உள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளை போல அடிப்பட்டு, அலைகிறவர் களாயிராமல், அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளர்கிறவர்களாய் இருக்கவேண்டும் என்பதற்காக கர்த்தர் சிலரை அப்போஸ் தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷ கர்களாகவும், சிலரை மேய்ப்பர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தினார் (எபே. 4:11-15). இது தவிர சபையில் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியங்கள் எதுவும கிடையாது. கண்காணி (Bishop), உதவிக்காரர் (Deacon), மூப்பர் (Elder) போன்ற ஊழியங் கள் யாவும் சபையில் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதாகும்.*

*3. நாம் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரி சுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாரு மாயிருந்து, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களாய் இருக்கிறோம். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாய் இருக்கிறார். அவர் மேல்*

நாம் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டி கட்டப் பட்டு வருகிறோம். (எபே. 2:19-22). சபை அப்போஸ்தலர்கள் தீர்க்க தரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு வருகிறதேயன்றி சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள். போதகர்கள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் அல்ல. இன்று முக்கியமாக மேய்ப்பர்கள் மற்றும் ஒரு சில சுவிசேஷகர்கள் தேவ ரகசியங்களின் வெளிப்பாடு என்று கூறி அநேக காரியங்களை குறித்து உபதேசிக்கிறார்கள். அநேக புதிய போதனைகளையும் கொண்டு வருகிறார்கள். இவர்களால் சபையில் பிரிவினைகள் அவ்வப்போது ஏற்படுகின்றன. இவர்கள் கபடமுள்ள வேலையாட் களே அன்றி, தேவனுடைய அழைப்பை பெற்ற உண்மையான ஊழியர்கள் அல்லர். கர்த்தர் தாம் உறுதிப்படுத்திய அப்போஸ்த லர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் மூலமாக கொடுத்த தேவரகசிய வெளிப்பாடுகளையும், உபதேசங்களையும் மாத்திரமே ஏற்றுக் கொள்ளுங்கள். அதிலே நிலைத்தும் இருங்கள். அதை விட்டு வலது இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக!

4. கர்த்தர் மல்கியா தீர்க்கதரிசியை கொண்டு முன் உரைத்தபடி, பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்கள் இருதயத்திற்கு திருப்ப (மல். 4:6ன் பின் பகுதி) அதாவது பிள்ளைகளாகிய லவோதிக்கேயா சபையினரை, பிதாக்களாகிய ஆதி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் உபதேசங்களுக்கு திருப்ப, காலம் நிறைவேறின போது எலியாவின் ஆவியை உடைய நம் முடைய தீர்க்கதரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் என்ப வரை அனுப்பினார் (மல். 4:5).

5. சிலர், இவரது பெயர் எங்கே வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது என வாதாடுகிறார்கள். இது குறைகுடம் கூத்தாடுவதற்கு ஒப்பாகும். இதோ, நான் என் தூதனை அனுப்பு கிறேன், அவன் எனக்கு முன்பாக போய் வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று மல்கியா தீர்க்கதரிசி மூலம் அத்தியாயம் 3:1ல் கூறப்பட்ட வாக்கியத்தால் குறிப்பிடப்பட்டவன் யார்? அவர் பெயர் அங்கு இல்லை. ஆனால் அவர் யோவான் ஸ்நானன். நியாயப்பிர மாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூரானுமாகிய இயேசு என பிலிப்பு கண்டு கொண்டான். மோசேயும், தீர்க்கதரிசிகளும் இயேசு என்ற பெயரையோ, அல்லது யோசேப்பின் குமாரன் என்றோ எங்கும் எழுதி வைக்கவில்லையே? மல்கியா, மோசே போன்ற தீர்க்கதரிசிகள் எழுதினவரை அக்காலத்தில் தேவனால் தெரிந்து

கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே அடையாளம் கண்டு கொண்டார்கள். மற்றவர்கள் இடறினார்கள். அவ்வாறாகவே, தீர்க்கதரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காமை குறித்தும் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் மட்டுமே அடையாளம் கண்டு கொண்டார்கள். மற்றவர்கள் இடறுகிறார்கள்.

6. இப்பொழுது மல் 4:5ல் குறிக்கப்பட்ட தீர்க்கதரிசி வில்லியம் மாரியன் பிரன்காம் வெளி 10:6ல் கூறப்பட்டிருக்கிறபடி தேவரகசியங்களை வெளிப்படுத்தினார். இவ்வாறாக வெளிப் படுத்தப்பட்ட இரகசியங்கள் லவோதிக்கேயா சபையில் தேவனால் முன்அறிந்து முன்குறிக்கப்பட்டவர்களின் இருதயத்தை ஆதி அப் போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களுக்கு திருப்பிக் கொண்டு வருகிறது. அதாவது சபைகளின் இருள் காலங்களில் மறைக்கப்பட்ட சத்தியங்கள் (யோவேல் 1:4) மறுபடியும் இக்கடைசி கால சபைக்கு அளிக்கப்பட்டு (யோவேல் 2:25) மணவாட்டி தன் மணவாளனாகிய கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வரும்போது எதிர்கொண்டு போய் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட தன்னை ஆயத்தப்படுத்தி வருகிறாள். இவ்வாறாக இந்த தீர்க்கதரிசியின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட மூல உபதேசங்களில் ஒன்று **ஸ்திரீயின் தலைமுக்காடு** எது என்பது ஆகும்.

7. ஸ்திரீயின் தலைமுக்காடு குறித்து தேவனுடைய சபையில் பலவிதமான போதனைகள் காணப்படுகின்றன. இதனால் சபைகளில் நாளுக்கு நாள் பிரிவினைகள் உண்டாகிறதை நான் காண்கிறேன். தமிழ்நாடு,. பீகார், ஒரிஸ்ஸா, கர்நாடகம் போன்ற நமது மாநிலங்களில் இது பல இடங்களில் பிரிவினைகளை உண்டு பண்ணினதை நான் நன்கு அறிவேன். ஆதலால் பரிசுத்தவான் களுக்கு ஸ்திரீயின் தலைமுக்காடு குறித்து ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட மூல உபதேசத்தை உங்களுக்கு எழுதி உணர்த் துவது சுவிசேஷகனாகிய எனக்கு மிக அவசியமாய் கண்டது. சத்தி யத்தை விட்டு விலகி மோசம் போகிறவர்களை சத்தியத்திடத்திற்கு திருப்ப வேண்டிய உக்கிராண பொறுப்பும் சுவிசேஷகன் மீது உள்ளதே.

8. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் ஆகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுல், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட வர்களாயும், பரிசுத்தவான்களாக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவ னுடைய சபைக்கு தன்னுடைய முதலாம் நிருபம் 11வது அதிகாரத் தில் ஸ்திரீயின் தலைமுக்காடு குறித்து எழுதுகிறான். இந்த அதிகாரத்தில் 1 முதல் 16 வசனங்களின் போதனைகளை நாம்

இங்கு காணலாம். இது உங்களது ஆத்துமாவுக்கு பிரயோஜனமாய் இருக்கும் என்று கிறிஸ்துவுக்குள் நான் நம்புகிறேன்.

9. முதலாம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல் நீங்கள் என்னை பின் பற்றுகிறவர்களாயிருங்கள் என்கிறான்.

**கடைசி சபையும், ஏழாம் சபையுமாகிய லவோதிக்கேயா சபையின் தூதனாகிய வில்லியம் மாரியன் பிரன்காம், இந்த சபையின் காலத்திற்குரிய வார்த்தையாக இருக்கிறார்.** மனுஷ குமாரன் இவருக்குள் தன்னை வெளிப்படுத்தினதினால், லூக்கா 17:30 இக்காலத்தில் நிறைவேறிற்று. அதே போன்று, முதல் சபையாகிய எபேசு சபையின் தூதனாகிய பவுல் அந்த சபையின் காலத்திற்குரிய வார்த்தையாக இருந்தான். தேவன் தம்முடைய குமாரனை அவனுக்குள் வெளிப்படுத்தினார் (கலா. 1:16). ஆதலால் தான் பவுல் நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல நீங்கள் என்னை பின்பற்றுங்கள் என கூற முடிந்தது.

10. நாம் பவுலை பின்பற்றுவது அவன் பிரசங்கித்த சுவிசேஷத்தைத் பின்பற்றுவது ஆகும். ஏனென்றால் அவனால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் அவனுடைய சுயஞானத்தினால் உண்டானது அல்ல. அது எந்த மனிதனுடைய யோசனையின்படி ஆனதும் இல்லை. அவன் அதை ஒரு மனுஷனால் பெற்றதும் இல்லை, மனுஷனால் கற்றதும் இல்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவே, அதை அவனுக்கு வெளிப்படுத்தினார் (கலா. 1:11 & 12). அவ்வாறாகவே ஏழாவது வகுப்பு வரை படித்த பிரன்காம் தன் சுய ஞானத்தினால் இந்த சபைக்குரிய செய்தியை பிரசங்கித்தது இல்லை. அது ஒரு மனுஷனுடைய யோசனையின்படி ஆனதும் இல்லை. அவர் அதை ஒரு மனுஷரிடத்திலிருந்து பெற்றதும் இல்லை, கல்லூரிகளில் சென்று கற்றதும் இல்லை. மாறாக இயேசு கிறிஸ்துவினிடமிருந்தே அந்த செய்தியை பெற்று பிரசங்கித்தார். இன்று அந்த செய்தி ஆதி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், உபதேசங்களுக்கு மணவாட்டியை திருப்பி, அவளை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒருவன் எவ்வாறு பவுலினால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை, உபதேசங்களை பின்பற்றுகிறவனாக இருக்க வேண்டுமோ, அவ் வாறாகவே பிரன்காமினால் பிரசங்கிக்கப்பட்ட செய்தியையும், உபதேசங்களையும் பின்பற்றுகிறவனாக இருக்கவேண்டும்.

*111. பவுல் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறு ஒருவரையும் நாம் அறியாதிருக்க வேண்டும் என பிரசங்கித்தான் (1 கொரி 2:2). அவனுடைய பேச்சும், பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும், பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாய் இருந்தபடியினால் (1 கொரி 2:5) அவனை தேவர்கள் ரூபம் எடுத்து இறங்கி வந்திருக்கிறார்கள் என அவனை அக்காலத்து மக்கள் நினைத்தார்கள் (அப் 14:11). பிரன்காமும் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் (எபி. 13:8); பழைய ஏற்பாட்டின் யேகோவா புதிய ஏற்பாடடின் இயேசு கிறிஸ்து என ஆணித்தரமாக பிரசங்கித்தார். அவருடைய பேச்சும், பிரசங்கமும் ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆதலால் அவரே கிறிஸ்து என இக்காலத்து மக்களில் சிலர் நினைக்கிறார்கள்.*

*112. அன்று பவுல் ஜனங்களை நோக்கி, மனுஷரே, நாங்கள் உங்களைப் போல பாடுள்ள மனுஷர்களே, ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்புங்கள் என்று பிரசங்கித்து ஜனங்களை தேவனிடத்திற்கு திருப்பினான் (அப். 14:15). அதே போன்று பிரன்காமும் ஜனங்களை நோக்கி, நான் ஊழியத்தை விட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். ஏனெனில், ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அதுவே நான் அவ்வாறு கூறும்படி செய்கிறது. அதுயென்னவெனில், நான் "ஊழியக்காரன்" அல்லது "ஒரு சகோதரன்" என்று அழைக்கும் அடைப்புக்குறியிலிருந்து எடுக்கப்பட்டு "இயேசு கிறிஸ்து" என்றே அழைக்கப்படுகிறேன். அவ்விதமாக என்னை அழைப்பது எனக்கு அந்திக்கிறிஸ்து என்ற பட்டத்தை சூட்டிவிடும். ஆனால் நான் அவரை ஒரு அந்திக்கிறிஸ்துவாக சந்தித்து, அவரை விட்டு அகற்றப்படுவதற்கு முன்னால், ஊழியத்தை விட்டு விலகி ஓடிப் போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன். **நான் கிறிஸ்து என்று கூறுகிறதான எல்லா விதமான கடிதங்களும், தொலைபேசி அழைப்பு மூலம் கூறுவதும் கடந்த சில நாட்களில் எனக்கு வந்துள்ளன. சகோதரரே, அது பிசாசினுடைய பயங்கரமான, வெட்கக்கேடான, தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும்.** பார்த்தீர்களா! நான் உங்களுடைய சகோதரன் என்பதை உணருங்கள் என்றார். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், இரண்டாம் பாகம், பக்கம் 1209, பத்தி 25 & பக்கம் 1211 பத்தி 30). இவ்வாறாக சபைக்காலங்களில் அதன் முதலாம் தூதனும் கடைசி தூதனும் ஜனங்களை சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து*

வினிடத்திற்கே திருப்பினார்களே அன்றி தங்களிடத்திற்கு திருப்ப வில்லை. ஆனால் இன்று அவரிடம் (சகோ.வி.ம.பிரன்காம்) மக்களை திருப்பும் கூட்டத்தை குறித்து மிக மிக எச்சரிக்கையாய் இருங்கள், வஞ்சிக்கப்படாதீர்கள்.

*13.* பவுல் பிரசங்கித்த பிரகாரமாய் நாம் சுவிசேசஷத்தை கைக்கொண்டிருந்தால் மட்டுமே, அதினால் இரட்சிக்கப்படுவோம். மற்றபடி நமது விசுவாசம் விருதாவாய் இருக்கும். (1 கொரி 15:2). நாம் பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினாலே இரட்சிப்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். (2 தெச 2:14). அப்படியானால் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் என்ன? பவுல் "இயேசுவே கிறிஸ்து" என காண்பித்து, திருஸ்டாந்தப்படுத்தி, (அப். 17:3) "கிறிஸ்து இயேசுவே கர்த்தர்" (2 கொரி 4:5) என்று பிரசங்கித்தான். கற்பனைகளில் எல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால், இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற் 12:29). இரண்டு கர்த்தாக்களோ அல்லது மூன்று கர்த்தாக்களோ உண்டு என பவுல் பிரசங்கிக்கவில்லை. ஒரே கர்த்தர் அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்றே பிரசங்கித்தான். ஆம், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே நம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று பிரசங்கித்தான். சகோ. பிரன்காமும் அதே உபதேசத்தை தான் பிரசங்கித்தார். இந்த சத்தியத்தை குறித்து நீங்கள் மேலும் அறிய வாஞ்சித்தால் "தேவத்துவம்" என்ற கைப்பிரதியை கேட்டு, இலவசமாக பெற்று பயனடையுங்கள்.

*14.* பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் "கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்" என்பதே. (1 கொரி 15:3). இந்த சுவிசேஷத்திற்கு நாம் கீழ்படிவதே பவுலை பின்பற்றுவது ஆகும். ஒருவன் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவதே (அப் 2:38) பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு கீழ்படிந்து அவனை பின்பற்றுவது ஆகும். (அப் 19:5). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே கிறிஸ்துவினுடனே கூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, அவருடனே கூட உயிர்த்தெழுந்து பிழைத்தும் இருக்கிறார்கள் (ரோ 6:3-8). இந்த உபதேசத்தைதான் பிரன்காமும் பிரசங்கித்தார். ஆக பவுலும், பிரன்காமும் ஒரே சுவிசேஷத்தைதான் பிரசங்கித்தார்கள். பிரன்காம் மக்களை ஆதி அப்போஸ்தல மூல உபதேசத்திற்கு திருப்பினாரேயன்றி அவர் ஒன்றையும் அதிலிருந்து கூட்டவும் இல்லை,

குறைக்கவும் இல்லை. நீங்கள் இந்த ஞானஸ்நானத்தை குறித்து அறிய விரும்பினால் "பொதுவான இரட்சிப்பு" என்ற கைப்பிரதியை கேட்டு, இலவசமாக பெற்று பயனடையுங்கள்.

15. ஆக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஒன்றான மெய் தேவன். பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம், இந்த உபதேசத்தில் பங்கு பெறு கிறவர்களே, கீழ்படிகிறவர்களே, பவுலை பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். உலக தோற்றமுதல் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிராத ஜனங்கள் மகாவேசியாகிய கத்தோலிக்க திருச் சபையையும் அவளுடைய குமாரத்திகளாகிய புராட்டஸ்டெண்ட், பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபைகளையும் பின்பற்றுகிறவர்களாய் இருப்பார்கள்.

16. இரண்டாவது வசனத்தில் பவுல், சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலேயும் என்னை நினைத்து கொண்டு நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளை கைக்கொண்டு வருகிறதி னிமித்தம் உங்களை புகழ்கிறேன் என்கிறான்.

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள் அவருடைய கற்பனை களை கைக்கொள்கிறார்கள். அவ்வாறாக கொரிந்து சபை சகோதரர்கள் எல்லாவற்றிலும் பவுலை நினைவுகூர்ந்து, அவன் அவர்களுக்கு ஒபபுவித்த கடடளைகளை அவர்கள் கைக்கொண்டு வருகிறதினால் அவர்களை புகழ்கிறான். கொரிந்தியர் பவுலினால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்டு, கர்த்தர் இடத்தில விசுவாசம் உள்ளவர்களாகி, அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் அவருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) பாவமன்னிப்பை பெறுவான் என்று தீர்க்கதரிசிகள் சாட்சி கொடுத் திருக்கிற பிரகாரம் (அப். 10:43) பாவமன்னிப்புக்கென்று கர்த்தரா கிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் (அப் 2:38) பெற்று அவன் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததினால், அவர்கள் அவனை பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள் (அப் 18:1-8). ஆதலால் அவனால் புகழப்பட்டவர்களானார்கள்.

17. நாமும் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் உபதேசங் களில் (எபே 2:20) நிலைத்திருப்போமாகில் அவர்களின் புகழ்ச்சிக் குரியவர்களாய் இருப்போம். ஏனென்றால் தேவனை அறிந்தவன் அப்போஸ்தலர்களுக்கு செவிகொடுக்கிறான். தேவனால் உண்டா யிராதவன் அவர்களுக்கு செவிகொடுப்பது இல்லை என 1 யோ 4:6ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களுக்கு செவிகொடுக்

கிறவனே கர்த்தருக்கு செவிகொடுக்கிறான் (லூக். 10:16). ஆதலால் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருகிறவர்களா யிருக்கவேண்டும். (யூதா 17). ஆவியானவர், லவோதிக்கேயா சபைக்கு தம்முடைய தூதன் மூலம் சொல்லுகிறதை காதுள்ளவர்கள் கேட்டு, விசுவாசித்து அதன்படி நடந்து தங்களை எடுத்துக்கொள்ளப் படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எவருடைய காதுகள் மந்தப்பட்டதோ அவர்கள் மகாவேசிக்கும் (கத்தோலிக்க திருச்சபை) அவளுடைய குமாரத்திகளுக்கும் (புராடஸ்டெண்ட், பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபைகள்) செவிக் கொடுக்கிறார்கள். அவர்களால் புகழப்படுகிறார்கள். நித்திய ஆக்கினைக்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டும் இருக் கிறார்கள்.

18. மூன்றாம் வசனத்தில் பவுல், ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாய் இருக்கிறார் என்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாய் இருக்கிறான் என்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருக்கிறார் என்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று நம்புகிறேன் என்கிறான்.

நம்முடைய மாம்ச சரீரத்தின் மேல்பாகம் தலை. நமது சரீரத்தின் அனைத்து பாகங்களும் நரம்புகள் மூலம் தலையில் உள்ள மூளையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்தே ஒவ்வொரு பாகங்களும் தங்கள் உத்தரவுகளை பெறுகின்றன. ஐம்புலன்களின் செயல்கள் யாவும் இங்கிருந்தே கட்டுப்படுத்தப் படுகின்றன. அதேபோன்று ஆவியினால் மறுபிறப்பு அடைந்த ஒரு புதுசிருஷ்டிக்கு தலை கிறிஸ்து. அவன் தன்னுடைய வாழ்க்கையின் அனைத்து தூண்டுதல்களையும் கிறிஸ்துவினிடமிருந்தே பெறு கிறான். அவரே அவனை ஆட்கொண்டு வழிநடத்துகிறார். அவரை அல்லாமல் இவனால் ஒன்றும் செய்ய இயலாது. கிறிஸ்துவை தலையாய்க் கொண்ட ஒருவன் பரிசுத்த ஆவியை மட்டும் சார்ந்து, தேவனுடைய வார்த்தையை மட்டும் சார்ந்து ஊழியம் செய் கிறான். இவன் சுயாதீனன். வெறும் சோத்தை தின்று தண்ணீர் குடிக்க நேர்ந்தாலும், இவனை விட்டு ஒவ்வொருவராக விலகி அனைவரும் சென்று இவன் மட்டும் தனியே நிற்க நேர்ந்தாலும் (2 தீமோ. 4:16 & 17) சத்தியத்தில் நிலைத்திருந்து அதையே போதிப்பான். சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய் இருப்பான் (1 தீமோ. 3:15). ஆரோக்கியமான உபதேசங்களை கொண்டு, கடிந்து கண்டனம் பண்ணி புத்தி கூறுவான் (2 தீமோ 4:2-4).

19. அடுத்து ஸ்திரீக்கு தலை புருஷன். ஆதியில் தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாய் சிருஷ்டித்தார் (ஆதி 1:27). இது ஆவிக்குரிய சிருஷ்டிப்பு. ஆவிக்குரிய சரீரம். Spiritual man is made in the image of God. God is a Spirit. பின் மாம்ச சரீரத்தை உடைய மனுஷனை கர்த்தர் பூமியின் மண்ணினாலே உருவாக்கினார் (ஆதி 2:7 & 8) (Carnal man is made in the image of beast) மூல சிருஷ்டிப்பில் (original Creation) ஆதாம், ஆணும் பெண்ணுமாக இருந்தான். ஆதியில் ஏவாள் மூல சிருஷ்டிப்பில் இல்லை. ஆனால் அவள் ஆதாமுக்குள் இருந்தாள். அவள் பெண் இனமாக, தனிப்பட்ட விதத்தில் ஆதியில் சிருஷ்டிக்கப்படவில்லை. ஏவாள் ஆதாமின் விலா எலும்பு ஒன்றில் இருந்து உருவாக் கப்பட்டாள் (ஆதி. 2:21-22). அப்போது ஆதாம், ஏவாள் இருவரும் சம அந்தஸ்துள்ளவர்களாக இருந்தனர். ஆனால் ஏவாள் தேவ னுடைய வார்த்தையை தன் அவிசுவாசத்தினால் மீறி சாத்தானால் வஞ்சிக்கப்பட்டாள். அவளுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையின் நிமித்தமாக அவளுக்கு புருஷன் தலையானான். உன் புருஷன் உன்னை ஆண்டுகொள்வான் என்றார் (ஆதி 3:16) (He shall rule over thee). இங்கே தான் ஸ்திரீயானவள் புருஷனுக்கு கீழ்பட்டவள் ஆனாள். இவளுடைய வீழ்ச்சிக்கு முன் இவள் எல்லா சிருஷ்டிப்புக்கு மேலும், மனுஷனுக்கு சமமாக ஆளுகை செய்தாள். ஆனால் வீழ்ச்சிக்கு பின் தன் பழைய அந்தஸ்தை இழந்து புருஷனுக்கு கீழ்ப்பட்டவளானாள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. அந்தப்படியே பூர்வீகத்திலே தேவனி டத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகள் தங்களுடைய புருஷனுக்கு கீழ்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப் படியே சாராள், ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்கு கீழ்படிந்தாள். (1 பேதுரு 3:5 & 6. இவ்வாறாக புருஷன் ஸ்திரீக்கு தலையானான்.

20. அடுத்து கிறிஸ்துவுக்கு தேவன் தலை. கிறிஸ்து தேவனுடைய ரூபமாய் இருந்தும் தேவனுக்கு சமமாக இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மை தாமே வெறு மையாக்கி, அடிமையின் ரூபம் எடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாக காணப்பட்டு மரண பரியந்தம், அதாவது சிலுவை யின் மரண பரியந்தம் கீழ்படிந்தவராகி, தம்மை தாமே தாழ்த்தினார் (பிலி. 2:7-11). மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர் யாவரையும் விடு

தலை பண்ணும்படிக்கும், தேவன் மாமசத்தையும் இரத்தத்தையும் உடையவராய், குமாரன் ஸ்தானத்தை அடைந்து, நியாயப்பிரமாணத் திற்குட்பட்டவராயிருந்ததினால், பிதா பெரியவர் ஆனார். இதைத் தான் இயேசு, பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார் என்றார் (யோ. 15:28). As long as Jesus was on earth, God the Father was greater than Him to His position and not greater to His person.

21. தேவன் ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணி உலகில் பிரவேசித்தபோது, மரியாளையும் யோசேப்பையும் தன் தாயும் தகப்பனுமாகக் கொண்டு அவர்களுக்கு கீழ்படிந்திருந்தார் (லூக். 2:51). சிருஷ்டி கர்த்தா, தன் சிருஷ்டிக்கு கீழ்படிவதா? கூடாதே! மாம்ச சரீரத்தை உடையவராய் மரியாளிடம் பிறந்ததினால் நியாயப் பிரமாணத்தின்படி தகப்பனையும் தாயையும் கனம் பண்ண வேண்டியவரானார் (யாத் 20:12). அந்தப்படியே தன் பெற்றோராகிய மரியாளுக்கும் யோசேப்புக்கும் கீழ்படிந்தார். As long as Jesus was on earth as a son to Joseph and Mary, He was subject to them. Joseph and Mary were His parents to His position and not to His person.

22. ஆதாம், ஏவாள் இருவரும் ஆதியில் சம அந்தஸ்தில் இருந்தார்கள். ஆனால் ஏவாள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ் படியாததால், அவளை ஆட்கொள்ள, அதாவது அவள் தன் புருஷனுக்கு கீழ்படிந்திருக்க தேவன் அவளை ஒப்புக்கொடுத்தார். அதே போன்று இரட்சிப்பின் திட்டத்தில் தேவன் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவராகி குமாரனாக வேண்டியதிருந்த தினால், குமாரன் பதவிக்கு தேவன் தலையானார்.

23. நான்காம் வசனத்தில் பவுல், ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடி கொண்டிருக்கிற எந்த புருஷனும், தன் தலையை கனவீனப் படுத்துகிறான் என எழுதுகிறான்.

இங்கு ஜெபம் பண்ணுகிற போதாவது தீர்க்கதரிசனம் சொல்லுகிற போதாவது புருஷன் தன் தலையை மூடிக் கொண் டிருந்தால் அவன் தன் தலையாகிய கிறிஸ்துவை கனவீனப் படுத்துகிறான் என காண்கிறோம். புருஷன் தன் தலையை மூடிக் கொண்டிருப்பது, புருஷன் தன் தலைமயிரை நீளமாக வளர்த்து காணப்படுவதற்கு எடுத்துக்காட்டாகும். புருஷர்கள் தங்கள் தலை மயிரை நீளமாக வளர்க்கக்கூடாது. ஆசாரிய ஊழியம் உடைய லேவி தன் தலையை சிரையாமலும் தன் தலை மயிரை நீளமாக

வளர்க்காமலும் தன் தலை மயிரை கத்தரிக்க வேண்டும் (எசே. 44:20). தலை மொட்டை அடிக்கக்கூடாது (லேவி 21:5).

24. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிய ஒருவன் அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளி இடத்திற்கு தன்னை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியானாக இருக்கிறான் (1 பேது. 2:9). நாம் ஆசாரியராய் இருப்பதினால் தலை மயிரை சிரைக்கக்கூடாது, நீளமாக வளர்க்கக்கூடாது, மாறாக தலைமயிரை கத்தரிக்க வேண்டும்.

25. நசரேய விரதம் (கர்த்தருக்கு பரிசுத்தமாய் இருத்தல்) காக்கிறவர்கள் மட்டும் கர்த்தருக்கென்று விரதம் காக்கும் காலம் நிறைவேறும் அளவும், பரிசுத்தமாய் இருந்து தன் தலைமயிரை நீளமாக வளர்க்கலாம் (எண் 6:5). ஏனென்றால் விரதம் காக்கும் நாள் எல்லாம் சவரன் கத்தி அவன் தலைமேல் படல் ஆகாது.

26. ஆக ஒருவன் தன் தலை முடியை நீளமாக வளர்த்துக் கொண்டு ஜெபம் பண்ணுவான் ஆனால் தீர்க்கதரிசனம் சொல்லுவான் ஆனால் அவன் தலையாகிய கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறான். ஆதலால் அவன் ஜெபம் பண்ணும்போதும், தீர்க்கதரிசனம் சொல்லும்போதும் தன் தலை மயிரை கத்தரித்தவனாக காணப்பட வேண்டும்.

27. ஐந்தாம் வசனத்தில் பவுல், ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். அது அவளுக்கு தலை சிரைக்கப்பட்டது போல் இருக்கும் என்கிறான்.

ஜெபம் பண்ணும்போதும், தீர்க்கதரிசனம் சொல்லும்போதும் ஒரு ஸ்திரீ தன் தலையை மூடிக்கொள்ள வேண்டும். அதாவது அவள் தன் தலைமயிரை நீளமாக வைத்துக்கொள்ள வேண்டும். கத்தரிக்கப்பட்ட தலையோடு, சிரைத்த தலையோடு அவள் தேவ சமூகத்தில் வந்து ஜெபிக்கக்கூடாது, தீர்க்கதரிசனம் சொல்லவும் கூடாது. அவள் அவ்வாறு செய்வாளானால் தன் தலையாகிய புருஷனை கனவீனப்படுத்துகிறாள். அவள் அவ்வாறாகவே தன் புருஷனுக்கு கனவீனமாக இருப்பதினால் தன் தலைமயிரை சிரைத்தோ, கத்தரித்தோ கொண்ட ஸ்திரீயை விவாகரத்து செய்து கொள்ள புருஷனுக்கு பூரண உரிமை உண்டு. இது குறித்து நீங்கள்

"கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்" என்ற செய்தியில் பக்கம் 60 பத்தி 211ஐ வாசிக்கலாம். ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை கத்தரிப்பது அவளுக்கு தலை சிரைக்கப்பட்டது போல் இருக்கும்.

28. ஆறாவது வசனத்தில் பவுல், ஸ்திரீ முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலை மயிரையும் கத்தரித்துப் போடக்கடவள், தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும், சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டு கொண்டிருக்கக்கடவள் என்கிறான்.

ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளாவிட்டால், அதாவது தன் தலைமயிரை நீளமாக கொண்டிராவிட்டால், தன் தலை மயிரை கத்தரித்து போடக்கடவள். தலைமயிரை கத்தரிப்பதும், சிரைப்பதும் அவளுக்கு வெட்கம், அவமானம். ஆதலால் தன் தலைமயிரை நீளமாக கொண்டிருக்கக்கடவள் என்கிறான்.

29. ஏழாவது வசனத்தில் பவுல், புருஷனானவன் தேவனுடைய சாயலும், மகிமையுமாய் இருக்கிறபடியால் தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை. ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள் என்கிறான்.

புருஷனானவன் தேவனுடைய சாயலும், மகிமையுமாய் இருக்கிறான். இவன் தேவ சாயலும், தேவரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆதலால் இவன் தன் தலைமயிரை நீள மாக வளர்க்க வேண்டிய தேவையில்லை. ஆனால் ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள். இவள் அவனுக்காக உருவாக்கப்பட்டாள். ஆதலால் தன் தலைமயிரை நீளமாக வளர்க்க வேண்டும் எனக் காண்கிறோம்.

30. எட்டாவது வசனத்தில் பவுல் புருஷன் ஸ்திரீயினி லிருந்து தோன்றினவன் அல்ல. ஸ்திரீயே புருஷனிடத்திலிருந்து தோன்றியவள் என்கிறான்.

நாம் ஆதி 2:21 & 22 வசனங்களை வாசிக்கும்பொழுது அங்கு புருஷன் ஸ்திரீயினின்று தோன்றினவன் அல்ல. ஸ்திரீயே புருஷ னிலிருந்து தோன்றியவள் என காண்கிறோம். புருஷன் தேவனுடைய மூல சிருஷ்டிப்பில் காணப்படுகிறான். ஆனால் ஸ்திரீயோ ஒரு பக்க உபசிருஷ்டிப்பாக (by-product) காணப்படுகிறாள்.

31. ஒன்பதாவது வசனத்தில் பவுல், புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல, ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ் டிக்கப்பட்டவள் என கூறுகிறான்.

நாம் ஆதி 2:18ஐ வாசிக்கும்பொழுது புருஷன் ஸ்திரீக்காக அல்ல, ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள் எனக் காண்கிறோம். புருஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என கண்ட தேவன் அவனுக்கு ஏற்ற துணையை உருவாக்கினார். ஸ்திரீ புருஷனுக்கு துணையாய் இருக்க, ஒத்தாசையாய் இருக்க, உதவி யாய் இருக்க, ஆறுதலாயிருக்க உருவாக்கப்பட்டாளேயன்றி, அவன் மீது எந்தவிதத்திலும் அதிகாரம் செலுத்துகிறதற்கு அல்ல.

*32.* பத்தாவது வசனத்தில் பவுல், ஆகையால் தூதர்களின் நிமித்தம் ஸ்திரீயானவள் தலையின் மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்கிறான்.

இங்கு இந்த வசனம் "ஆகையால்" என்று ஆரம்பிப்பதினால், "எதினால்" என்ற கேள்வி எழும்புகிறது. புருஷன் தேவனுடைய மகிமையாய் இருக்கிறபடியால், புருஷன் தேவனுடைய சாயலாய் இருக்கிறபடியினால், புருஷன் ஸ்திரீயினிலிருந்து தோன்றினவன் அல்லாதலால், புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்லா தலால், ஸ்திரீ புருஷனுடைய மகிமையாய் இருக்கிறபடியினால், ஸ்திரீயே புருஷனின்று தோன்றினபடியினால், ஸ்திரீ புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டபடியினால் அவள் தூதர்களின் நிமித்தம் தலை மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்.

*33.* இதை ஆங்கிலத்தில் For this cause ought the women to have authority on her head because of the angels. என வாசிக்கிறோம். இங்கு authority என்ற சொல்லுக்கு "ஏக்சூசியா" (Excusia) என்ற கிரேக்கச் சொல் உள்ளது. இதன் பொருள் "அதிகாரம்" ஆகும். அதாவது ஸ்திரீயானவள் தன் தலைமயிரை நீளமாக வளர்ப்பது அவளுடைய புருஷனுக்கு அவள் மேல் உள்ள அதிகாரத்தை காட்டுகிறது. அதாவது நீண்ட தலைமயிரை உடைய ஸ்திரீ தனது புருஷனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவள் (ஆதி 3:16) என்பதை காட்டுகிறது. தன் புருஷனை தன் தலையாய் கொண்ட ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாகக் கொண்டவளாய் இருப்பாள். இங்கு தூதர்கள் என்ற சொல் மனிதர்களை குறிக்கிறது. உதாரணமாக லூக் 9:12ஐ வாசியுங்கள்.

தூதர்களின் நிமித்தம் ஸ்திரீ நீண்ட மயிரை வைத்திருக்க வேண்டும் என்று வேதம் உரைக்கிறதே? தூதர்களுக்கும் ஸ்திரீ களுக்கும் சம்பந்தம் என்ன? தூதன் என்பவன் யார்? செய்தியாளன். தேவனிடத்திலிருந்து வந்த ஒரு தூதன், ஒரு உண்மையான செய்தி யாளன், உங்களிடம் வருவானானால், நீங்கள் நீண்ட தலை முடியை

வைத்திருப்பது நலம். இல்லையெனில் அவன் உங்களை கடிந்து கொள்வான். அது முற்றிலும் உண்மை. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு செய்தியாளன் அதை கடிந்து கொள்ளுவான். எனவே பவுல் தூதர்களின் நிமித்தம் நீங்கள் நீண்ட தலைமுடியை வைத்துக் கொள்ளுங்கள் என்கிறான் (*ஒன்றாயிருத்தல்*, பக்கம் 45, பத்தி 131 & 132).

*34.* ஒரு பெண் தான் திருமணம் ஆனவள் என்பதற்கு அடையாளமாக, தன் புருஷனால் தாலிக்கொடி அணிந்து கொள்ளு கிறாள். ஒரு பெண் கழுத்தில் தாலிக்கொடி தொங்கும்போது அவள் திருமணமானவள் என்று உறுதியாகிறது. அதே போன்று ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாக கொண்டிருந்தால் அவள் தன் புருஷனின் அதிகாரத்திற்குட்பட்டவள் என்பது உறுதியாகிறது. அவள் தன் தலையை சிரைத்தும் கத்தரித்தும் தலைமயிரை மூடிக் கொண்டும் காணப்படுவாளானால், தன் புருஷனை கனவீனப்படுத் தும் ஸ்திரீ என்று நாம் அறிந்து கொள்ளலாம். அப்பொழுது அவள் ஏவாளை போன்று தன் சொந்த வழியை பின்பற்றுகிறவளா யிருப்பாள்.

35. பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வசனங் களில் பவுல் கர்த்தருக்குள் ஸ்திரீ அல்லாமல் புருஷன் இல்லை, புருஷன் இல்லாமல் ஸ்திரீ இல்லை, ஸ்திரீயானவள் புருஷனின்று தோன்றுகிறது போல புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது என எழுதுகிறான்.

இதன் கருத்தை சுருக்கமாக சொல்லப்போனால், ஆணின்றி பெண் இல்லை, பெண் இன்றி ஆண் இல்லை என்பதே. இன அபி விருத்திக்கு இருபாலாருமே தேவைப்படுகிறார்கள். இதற்காகவே அவர்கள் தேவனால் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டனர். கர்ப்பத்தின் கனி தேவனால் கிடைக்கும் பலன். பிள்ளைகள் கர்த் தரால் வரும் சுதந்திரம் (சங் 127:4). இவர்கள் பலுகி பெருகவே ஆசீர்வதிக்கப்பட்டார்களேயன்றி கர்ப்பத்தடை செய்து கொள்ள அல்ல. கர்ப்பத்தடை தேவ நீதிக்கு விரோதமானது. இவ்வாறாக சகலமும் தேவனால் உண்டாகியிருக்கிறது.

*36.* பதின்மூன்றாவது வசனத்தில் பவுல் ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமல் இருக்கிறது லட்சணமாக இருக்குமோவென்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள் என்கிறான்.

அதாவது ஸ்திரீகள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணும் போது தங்கள் தலை மயிரை கத்தரித்தோ, சிரைத்தோ காணப் படலாகாது. அவர்கள் நீண்ட தலைமயிரை உடையவர்களாக இருக்க வேண்டும். ஸ்திரீ தன் தலைமயிரை கத்தரிப்பதும், சிரைப்பதும் அவலட்சணமாக இருக்கும் என்கிறான்.

நான்காம் வசனத்திற்கு நாம் கண்ட விளக்கமே இங்கு போதுமானது. புருஷன் நீண்ட தலைமயிரை உடையவனாக காணப்பட்டால் அவன் தன் தலையாகிய கிறிஸ்துவை கனவீனப் படுத்துகிறான்.

38. பதினைந்தாம் வசனத்தில் பவுல், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாய் இருக்கிறதென்று சுபாவமே உங்களுக்கு போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறதே என்கிறான். ஸ்திரீயானவள் தன் தலைமயிரை நீளமாக வளர்க்கிறது அவளுக்கு மகிமையென்று பெண் சுபாவமே உங்களுக்கு போதிக்கிறதில்லையா என்கிறான். **இந்த நீண்ட தலைமயிரே அவள் தலைக்கு முக்காடு எனக் கூறி முடிக்கிறான். அவன் ஸ்திரீக்கு தலை முக்காடு அவள் நீண்ட தலைமயிரே என்று கூறினபின் அதற்கு எதிர்ப்பு வியாக்கியானம் கொடுக்க தகுதியுள்ளவர்கள் இப்பூமியில் யாரும் இல்லை. ஏனென்றால் அவன் அக்காலத்து வார்த்தையாக இருந்தான். அதாவது அக்காலத்து தேவனாக இருந்தான்.** அவன் நீண்ட தலைமயிரே ஸ்திரீக்கு தலைமுக்காடு என்று கூறினால், அது நீண்ட தலைமயிரைதான் குறிக்கிறதேயன்றி, சேலை முந்தானையை அல்ல, தொப்பியை அல்ல, கைக்குட்டையை அல்ல. ஸ்திரீயின் தலை முக்காடு குறித்து முதலாம் வசனம் முதல் தொடங்கிய விளக்கம் பிதினைந்தாவது வசனத்தில் ஸ்திரீயின் தலைமுக்காடு அவளது நீண்ட தரைமயிரே என திட்டவட்டமாக கூறி உபதேசம் முடிவு பெறுகிறது. இங்கு மகிமை என்ற சொல், ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு அது கிரீடம் போன்றது. அதோடு மட்டும் அல்ல, அது அவளுக்கு பெருமையும், புகழ்ச்சியும் ஆகும் என்பதாகும்.

ஸ்திரீயின் இந்த மகிமையை தேவனுடைய ஷெகீனா மகிமையுடன் சிலர் ஒப்பிடுவது தவறு ஆகும். ஷெகீனா மகிமை தேவனுடைய ஆலயத்தையும், மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தையும் நிரப்பிற்று (filled) என்றே நாம் காண்கிறோம். மூடிற்று (covered) என்று கூறப்படவில்லை (1 இரா. 8:10; யாத் 40:34 & 38). ஷெகீனா

என்றாலே வாசம் பண்ணுதல் என்று தான் பொருள். அதாவது எவ்வாறு ஷெகீனா மகிமை தேவனுடைய ஆலயத்தையும், ஆசரிப்புக் கூடாரத்தையும் நிரப்பிற்றோ அதே போன்று இன்று தேவனுடைய ஆலயமாகிய அவருடைய சரீரமான சபையையும், அதன் ஒவ்வொரு அவயவங்களாகிய அவருடைய மணவாட்டியையும் பரிசுத்த ஆவி நிரப்புகிறது (எபே 2:20, 21; 1 கொரி 6:19 & 3:16).

39. பதினாறாவது வசனத்தில், பவுல், ஆகிலும் ஒருவன் வாக்குவாதம் செய்ய மனதாய் இருந்தால், எங்களுக்கும் தேவனுடைய சபைக்கும் அப்படிப்பட்ட வழக்கம் இல்லை என்று அறியக்கடவன் என்கிறான்.

40. அதாவது ஸ்திரீயின் தலை முக்காடு அவளது நீண்ட தலைமயிரே என்பது குறித்து யாரும் எங்களோடே வழக்காட நினைத்து எங்களை அழைத்தால் நாங்கள் அதற்கு ஒப்புதல் அளிப்பது இல்லை. ஏனென்றால் புத்தியீனமான தர்க்கங்களும், வாக்குவாதங்களும் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும். ஆதலால் இது பற்றி வாக்குவாதம் செய்வது எங்களுக்கும் தேவனுடைய சபைக்கும் வழக்கம் இல்லை எனக் கூறி முடிக்கிறான்.

ஆதலால் எவனும் ஸ்திரீயின் தலை முக்காடு அவள் சேலை முந்தானை என்றோ அல்லது அவள் அணிந்திருக்கும் தொப்பிதான் என்றோ அல்லது அவள் தலையிலே போட்டிருக்கும் கைக் குட்டைதான் என்றோ கூறினால் அது குறித்து நாங்கள் அவனிடம் தர்க்கிக்க, விவாதிக்க மாட்டோம். ஏனென்றால் ஸ்திரீயின் தலை முக்காடு அவளது நீண்ட தலைமயிர் என்பதற்கு இதுவே பூரண விளக்கமாகும்.

41. இனி, ஸ்திரீயின் தலை முக்காடு குறித்து புறஜாதிகளின் கடைசி தீர்க்கதரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் என்ன உபதேசிக்கிறார் என்பதை நாம் இங்கு காணலாம்.

(அ) ஒரு ஸ்திரீ தலையை மூடிக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் வேதமோ தலைமயிர்தான் அவளுக்கு முக்காடாக அளிக்கப்பட்டுள்ளது என்று உரைக்கிறது. தொப்பி அல்ல. மோசே, "ஆண்டவரே, பாதரட்சைக்கு பதிலாக என் தொப்பியை கழற்றி இருக்கிறேன்" என்று கூறியிருந்தால் அது எவ்வாறு இருக்கும்? அது சரியல்ல. கர்த்தர் "பாதரட்சை" என்றால் அது "பாதரட்சையே" என்றுதான் அர்த்தம். அவர் "தலைமயிர் என்றால் அது "தலைமயிர்" என்றுதான் அர்த்தம். அது தலை

மயிரை தான் குறிக்கிறதேயன்றி தொப்பியை அல்ல. அவர் எதைக் கூறுகிறாரோ அதைத்தான் குறிப்பிடுகிறார். வேதத்தை நாம் சொந்தமாய் வியாக்கியானம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அது எதை கூறுகிறதோ அதையே குறிப்பிடுகிறது. தேவனே அதன் வியாக்கியானி *(காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல், பக்கம் 38, பத்தி 1).*

(ஆ) 1."நான் தரிசனத்தில் ஆழ்ந்தேன். அப்பொழுது யாரோ ஒருவர் என்னுடன் கூட இருந்தது போல் தோன்றினது. "நான் அவரைப் பார்க்கவில்லை. அது ஒரு சத்தம் மாத்திரமே. நான் அந்தப் பக்கம் பார்த்தேன். அவர் "இப்பொழுது மணவாட்டி முன் காட்சி (preview) வரப்போகிறாள்" என்றார். நான் பார்த்தபொழுது, அது வரை நான் கண்டிராத மிகவும் அழகான நன்றாக உடுத்த பெண்மணி குழு ஒன்று என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. **அவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான ஆடைகளை அணிந்திருந்தனர். அவர்கள் அனைவரும் நீண்ட கூந்தல் உடையவர்களாய்,** முழுக் கைக்கொண்ட மேலாடையும் நீண்ட பாவாடையும் அணிந்திருந்த வாலிப பெண்கள். அவர்கள் 20 வயதுள்ளவர்கள் போல் தோற்றம் அளித்தனர்" *(சிறந்த வேலைப்பாடு, பத்தி 187).*

2. "அவர்கள் வித்தியாசமான உடை அணிந்திருந்ததின் காரணம் அவர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதை காண்பிக்கிறது. அவர்கள் ஒருங்கே சேர்ந்து மண வாட்டியாய் இருப்பவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நீண்ட கூந்தல் இருந்தது. **அவர்கள் எவ்வித முக அலங்காரம் செய்து கொண்டிருக்கவில்லை"** *(சிறந்த வேலைப்பாடு, பத்தி 194ன் மத்திய பாகம்)* **ஆடையில் வித்தியாசங்கள் காணப்பட்டு அவர்கள் பற்பல தேசத்தை சேர்ந்தவர்கள் என்று உறுதிப்படுத்தினர். ஆனால் நீண்ட தலைமயிர் அது எந்த நாட்டை சார்ந்தவராய் இருந்தாலும் அது அனைவருக்கும் பொதுவானதாக இருந்தது.**

இ. யாராகிலும் என்னிடம் விவாதிக்க விரும்பினால் இந்த தேவவார்த்தையைக் குறித்தே விவாதியுங்கள். "வாருங்கள்" என்று அழைப்புக் கொடுக்கிறேன். அவ்விதம் எல்லா சமயங்களிலும் நான் அழைப்புக் கொடுத்துள்ளேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பது சரியில்லை என்று நினைத்தீர்கள் என்றால் நீங்கள் வந்து என்னிடம் விவாதியுங்கள். சர்ப்பத்தின் வித்து என்று ஒன்றும் இல்லை என்று நினைத்தீர்கள்

என்றால் நீங்கள் வந்து என்னைப் பாருங்கள். நாம் வார்த்தையை எடுத்து விவாதிப்போம். **பெண்களுக்கு நீளமான தலைமயிர் அவர்களுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் விசுவாசியாவிட்டால்,** மேலும் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் என்னிடம் வாருங்கள். சகோதர வித்துக்களே வாருங்கள். வந்து விவாதியுங்கள்.

**நீங்கள் வித்தாயிருந்து தேவ வார்த்தையோடு ஒவ்வாமல் இருக்க முடியாது. ஏனென்றால் வார்த்தையே வித்தாயிருக்கிறது.** நீங்கள் வித்தாயிருக்கும் பட்சத்தில், எவ்வாறு அதனோடு ஒவ்வாமல் இருக்க முடியும்? (உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து, முதலாம் பாகம், 29வது பக்கம் கடைசிப் பத்தி, 30வது பக்கம் முதலாம் பத்தி).

ஈ. நான் அவருக்கு இவ்வாறு பதில் அளித்து எழுதினேன். "என் விலையேறப் பெற்ற சகோதரரே, நான் தவறு செய்யவில்லை. **ஸ்திரீ தன் தலையை மூடிக்கொள்ள வேண்டும் என்றும், அவள் ஏன் அதை செய்ய வேண்டும் என்றும் 1 கொரி 11ம் அதிகாரம் உரைக்கிறது. பிறகு பதினைந்தாம் வசனம் அவளுடைய நீளமான தலைமயிர் அவளுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறதாக கூறுகிறது.** தொப்பியல்ல, கத்தோலிக்க ஆவி சபையை நீண்ட காலமாக ஆட்கொண்டு விட்டது. அவளுடைய நீளமான தலைமயிரே அவளுடைய முக்காடு. இயற்கையே அதை எடுத்துக் காட்டுகிறது அல்லவா? (ஒன்றாயிருத்தல், பக்கம் 44, பத்தி 130).

42. பிரியவானவர்களே, தேவனுடைய வார்த்தையும், தீர்க்கதரிசியின் உபதேசமும் ஒன்றுக்கொண்று இசைந்து காணப்படுவதை நாம் காண்கிறோம். ஆக ஒரு ஸ்திரீயின் தலை முக்காடு அவள் நீண்ட தலைமயிரே. அவள் தன் தலையை தன் சேலை முந்தானையாலோ அல்லது ஒரு தொப்பியாலோ அல்லது ஒரு கைக்குட்டையாலோ மூட வேண்டிய தேவையில்லை. அவள் தன் தலைமயிரை நீளமாக வளரவிட்டால் போதும். அதுவே அவள் தலை முக்காடு.

43. ஒரு ஸ்திரீயின் தலைமுக்காடு எது என்பது குறித்து தேவனுடைய சபையில் காணப்படும் சில தவறான உபதேசங்களை உங்களோடு இங்கு பகிர்ந்து கொள்ளவும் வாஞ்சிக்கிறேன்.

(அ) 1. ஒரு ஸ்திரீ தன் தலையை தன் சேலை முந்தானையாலோ அல்லது ஒரு கைக்குட்டையாலோ அல்லது ஒரு

தொப்பியாலோ மூடிக்கொள்வதே அவள் தலை முக்காடு என்ற உபதேசத்தில் பற்று உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அல்லது தன் நீண்ட தலைமயிரே தன் தலைமுக்காடு என்ற உபதேசத்தில் நிலைத்திருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படியே நடக்கட்டும். இதில் கட்டாயம் எதுவும் வேண்டாம். ஏனென்றால் இது ஒரு ஆத்மரட்சிப்புக்கு அத்தியாவசியமானது அல்ல. ஆக, இங்கு சபைக் கூடுதல் வேளையில் சிலர் தங்கள் தலையை தங்கள் சேலை முந்தானையால் மூடியும், சிலரர் மூடாமலும் காணப்படுகிறார்கள். இது சபை ஒழுங்கு அல்லவே. சபை கூடுகையில் அங்கு ஒழுங்கு வேண்டும்!

2. எது சரி, எது தவறு என்ற திட்டவட்டமாக போதனை இல்லாத இந்த உபதேசம் மனுஷனை பிரியப்படுத்தும், சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கி வைக்கும் மாயமான போதகம் ஆகும். ஒருவன் உள்ளதை உள்ளது என்று இல்லதை இல்லவென்றும் சொல்ல வேண்டும். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாகும். அப்படியும் இருக்கலாம் இப்படியும் இருக்கலாம் என்பது தீமையினால் உண்டானது ஆகும். ஒரு உபதேசம் சரி அல்லது தவறு என்பதே வேத ரீதியானது. ஆகவே உறுதியில்லாத இந்த உபதேசம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமல்லாமல் பேய்த்தனத்தடுத்ததாக இருக்கிறது.

ஆ.1. ஸ்திரீயின் தலைமுக்காடு அவர்கள் தங்கள் தலையை தங்கள் சேலை முந்தானையால் மூடிக்கொள்வதோ அல்லது அவர்களது நீண்ட தலைமயிரா என்பது அந்தந்த லோக்கல் சபை மேய்ப்பவர்களே முடிவெடுக்க வேண்டும், மேய்ப்பனுடைய முடிவுக்கு சபை கீழ்ப்படிய வேண்டும், ஏனென்றால் சபையின் முழுப் பொறுப்பு சபை மேய்ப்பவனையே சாரும் என்பதாகும்.

2. ஆக சில இடங்களில் சபைக் கூடுதலில் மேய்ப்பவர்கள் ஸ்திரீ தங்கள் தலையை தங்கள் சேலை முந்தானையால் மூடிக்கொள்வதே அவர்கள் தலை முக்காடு என உபதேசிக்கிறார்கள். ஜனங்கள் அதன்படி நடக்கிறார்கள். சில இடங்களில் மேய்ப்பர்கள் ஸ்திரீக்கு நீண்ட தலைமயிரே தலைமுக்காடு என உபதேசிக்க அவர்கள் தங்கள் தலையை தங்கள் சேலை முந்தானையால் மூடுவது இல்லை, நீண்ட தலைமயிருடன் காணப்படுகிறார்கள்.

3. தேவனுடைய சபையானது அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறதேயன்றி (எபே. 2:20) ஒரு மேய்ப்பனுடைய அஸ்திபாரத்தில்

அல்ல. மேய்ப்பன் அவனாக எந்த ஒரு உபதேசத்தையும் கொண்டு வர முடியாது. அவனுடைய எந்த போதகமும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் உபதேசங்களுக்கு இசைவாகவே இருக்க வேண்டும். ஒரு மேய்ப்பனுடைய உபதேசம் அப்போஸ்தலர்கள், தீர்க்க தரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களுக்கு மாறாக இருக்கு மானால், நாம் அந்த மேய்ப்பனுடைய போதகங்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் அவன் ஒரு கபடமுள்ள வேலை யாள்.

4. நாம் மேய்ப்பனையும் சோதித்தறிய வேண்டிய வர்களாக இருக்கிறோம். ஏனென்றால் கபடம் உள்ள வேலை யாட்கள் உண்டு. (2 கொரி 11:13). தந்தன் வழியையும் தந்தன் மூளையிலிருந்து தந்தன் பொலிவையும் நோக்கிக் கொண்டிருக் கிற பகுத்தறிவில்லாத மேய்ப்பன் உண்டு (ஏசா 56:11). ஆடுகளுக் காக கவலைப்படாத கூலிக்காக வேலை செய்யும் மேய்ப்பர்கள் உண்டு (யோ 10:13). ஆக எந்தவொரு மேய்ப்பனுடைய தன்னிச்சை யான போதகத்தை நம்பி நாம் மோசம் போகக்கூடாது.

இ1. மூன்றாவது ஆதி 24:64 & 65 வசனங்களைச் சுட்டிக் காட்டி ரெபேக்காள் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கை கண்டபோது ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக் கொண்டாள். அவள் முக்காடிட்டு தன் மணவாளனை கனப்படுத்தினாள். அவ்வாறாகவே இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியும் முக்காடிட்டு மணவாளனை கனப்படுத்த வேண்டும் என்பதே.

2. ஈசாக்கை கண்டவுடன் ரெபேக்காள் முக்காடிட்டுக் கொண்டாள். அவள் தன் தலையை முக்காடிட்டுக் கொண்டாள் என்று கூறப்படவில்லை. இதை நாம் ஆங்கிலத்தில் she took a veil and covered herself என்று வாசிக்கிறோம். அதாவது அவள் ஒரு முக்காடை எடுத்து தன்னை மூடிக்கொண்டாள். நமது நாட்டில் முஸ்லீம் பெண்கள் தங்கள் வழக்கமான பெண்களின் ஆடைகளுக்கு மேல் கருப்பு அல்லது வெள்ளை நிறமான ஒரு மேலாடை அணிந்து தங்கள் முகத்தை அதனோடு இணைந்த ஒரு பர்தாவினால் மூடிக்கொள்வார்கள். இதே போன்று ஒரு மேல் ஆடையை தான் அன்று ரெபேக்காள் எடுத்து அணிந்து கொண்டாளே அன்றி அவள் தன் மீது ஒரு முக்காடு அணிந்து கொள்ளவில்லை. இந்த மேல் ஆடையை தான் முக்காடு veil என்று ஆதி 24:65ல் கூறப்பட்டிருக்கிறது. ஸ்திரீயின் தலை முக்காடுக்கு இந்த வசனத்தை எடுத்துக்காட்டுவது பொருத்தமானது அல்ல.

3. பிரியமானவர்களே, ரெபேக்காள் தன் மணவாளனை கண்டபோது முக்காடிட்டு அவனைக் கனப்படுத்தினபோது இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியும் இயேசு கிறிஸ்துவை கனப்படுத்த வேண்டும் என்ற உபதேசத்தில் வஞ்சிக்கப்பட்டு, மாயையில் இழுப்புண்டு, உங்கள் ஆத்துமாவை பாழாக்கிக் கொள்ளாதீர்கள். இயேசு கிறிஸ்துவின மணவாட்டி, ஆண், பெண் இருபாலையும் சேர்ந்தவர்கள். அப்படியானால், இனி ஆண்களும் சேலை கட்டி, முந்தானையால் தங்கள் தலையை முக்காடிட்டுக்கொள்ளவேண்டும் என நமது மத்தியில் உள்ள கூட்டை விட்டு அலைகிற குருவியைப் போன்ற நூதன மேய்ப்பர்கள் தங்கள் சுயபுத்தியின் மேல் சார்ந்து போதிக்க ஆரம்பித்து விடுவார்களோ என ஐயப்படுகிறேன்.

44. இந்த ஆடைகளைக் குறித்து நீங்கள் மேலும் அறிய விரும்பினால் என்னுடன் ரூத் 3:15க்கு வாருங்கள். இங்கு போவாஸ், ரூத்தை நோக்கி நீ போர்த்திக் கொண்டிருக்கிற போர்வையை விரித்து பிடி என்றான். இது ஆங்கிலத்தில் Also he said, bring the veil that thou hast upon thee and hold it out என உள்ளது. இங்கு போவாஸ் ரூத்தை நோக்கி, நீ உன் மீது போர்த்தியுள்ள அந்த முக்காடை கொண்டு வந்து அதை விரித்து பிடி எனக் கூற, அவள் தன் மேலாடையாகிய அந்த முக்காடை எடுத்து விரிக்க அதிலே ஆறு பிடி வாற்கோதுமையை அளந்து போட்டான் எனக் காண் கிறோம். இங்கு முக்காடு/Veil என்று கூறப்பட்டுள்ள அக்காலத்து பெண்களின் மேலாடையே அன்றி தலை முக்காடு அல்ல.

45. மோசே முகத்தின் மேல் முக்காடிட்டுக் கொண்டான் (Moses, who put a veil over his face). இதை இவன் தேவசமூகத் தில் அனுசரிக்காமல் ஜனங்கள் மத்தியில் மட்டுமே அனுசரித்தான் (யாத் 34:31-35). மோசே தன் முகத்தின் மேல் முக்காடு ஏன் போட்டுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது? அவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்கள் காலத்திற்குரிய வார்த்தையாக இருந்தான். அந்த வார்த்தை அறிவிக்கப்படும் வரைக்கும் அவன் தன் முகத்தை முக்காடு போட்டு மறைத்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. வார்த்தை அறிவிக்கப்படுவதற்காக அவன் அக்காலத்திற்குரிய தேவனாய் இருந்தான். ஜீவவார்த்தையாக தன்னை மறைத்துக் கொண்டான். திரை எதை மறைக்கிறது? வார்த்தையை. திரை யினால் தன்னை மறைத்துக் கொண்டபோது அவன் மோசேயா யிருக்கவில்லை. அவன் தேவனாக இருந்தான். வார்த்தை வெளிப் பட்ட பின்பு திரை நீக்கப்பட்டு மோசே மறுபடியும் மோசேயாய் இருந்தான்.

46.(1) சகோ. பிரன்காம் கேள்வி பதில் 18ல், புதிய ஏற்பாட்டிலுள்ள ஸ்திரீகள் சபைக்கு வந்து, உட்கார்ந்து, முக்காடிட்ட முகத்துடனும், துக்கமான முகத்தோற்றத்துடனும் முழு ஆராதனைகளில் உட்கார்ந்திருந்தார்கள் எனக் கூறுகிறார். இங்கு இவர் முக்காடிட்ட முகத்துடன் (முக முக்காடு) என பேசி யிருக்கிறாரே அன்றி ஸ்திரியின் தலை முக்காடு பற்றி பேச வில்லை. ஆனால் நமது மத்தியில் உள்ள பிரச்சினை ஸ்திரீயின் தலை முக்காடு எது என்பது பற்றியேயன்றி ஸ்திரீயின் முக முக் காடு பற்றி அல்ல, மேலாடை பற்றி அல்ல. பொதுவாக மேலாடை, முகமுக்காடு தலை முக்காடு இவை அனைத்தும் முக்காடு/Veil என்றே வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டது.

(2) இங்கு சபையில் பெண்கள் முக முக்காடிட்ட முகத் துடனும், துக்கமான முகத்தோற்றத்துடனும் உட்கார்ந்திருந்தார் கள் என்கிறார். இது சுயதோற்ற பொருளை உடையது அல்ல. ஏனென்றால் இதற்கு தகுந்த வேதவாக்கிய ஆதாரங்கள் எதுவும் கிடையாது. அதாவது பெண்கள் சபையில் தங்கள் தலையை தாழ்த்தி, பேசாமல் மவுனமாக, அமைதலோடு உட்கார்ந்திருக்க வேண்டும் என 1 கொரி 14:34 & 35ல் கூறப்பட்டுள்ளதே தீர்க்கதரிசி கூறியதின் கருத்து என நாம் யூகிக்கலாம்.

47. தேவ இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டு ஆதி அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் உபதேசங்களுக்கு நாம் திருப்பப்பட்ட போதிலும் ஸ்திரீயின் தலை முக்காடு குறித்து தேவ சபையிலே இத்தனை வேற்றுமையான உபதேசங்கள் காணப் படுவது சத்திய ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் சபையில் அடுத்தடுத்து காணப்படுவதை எடுத்துக் காட்டுகிறது. கூடு மானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தவிர மற்ற யாவரும் வஞ்சிக்கப்படுவார்கள். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத்தக்கதாக உபதேசங்கள் மிக்க நெருக்கமாக இருக்கும். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்பட முடியாது. நாங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம். தீர்க்கதரிசியின் உபதேசங்களில் இருக்கிறோம், நாங்கள் மணவாட்டி எனக் கூறி விட்டு வார்த்தையை மறுதலிக்கின்றனர். தீர்க்கதரிசியின் உபதேசத்தை மறுதலிக்கின்றனர். ஆம், நாங்கள் தீர்க்கதரிசியின் உபதேசத்தில் இருக்கிறோம் நாங்கள் மணவாட்டி எனக் கூறிக் கொண்டே களைகளை விதைக்கிற தீர்க்கதரிசியின் உபதேசங்களை மறுதலிக்கிறவர்கள் நமது மத்தியில் ஏராளம்

உண்டு. அதுதான் வஞ்சகம். இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்கள் யாவரும் ஆக்கினைக்குள்ளாக் கப்படும்படிக்கும் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள் அனுப்பும் கால மாக இருக்கிறது.

*48.* மனிதர்கள் தங்கள் சொந்த கருத்துக்களின் அடிப் படையில் அல்லாமல் வேறெந்த அடிப்படையிலும் ஒன்று சேர முடியாது. ஆதலால் தான் தேவன் தனிப்பட்ட நபர்களை தெரிந்து கொள்ளுகிறார். ஒரு மனிதனுடன், ஒரு கூட்டம் மனிதர் களுடன் அல்ல. தேவன் இஸ்ரவேலரை ஒரு நாடாக கருதி அவர்களோடு இடைபடுகிறார். ஆனால் புறஜாதியில் தனிப்பட்ட மனிதர்களோடே இடைபடுகிறார். இது உண்மை. ஆனால் இவர்கள் ஒரு கூட்டம் மனிதர்களைக் கூட்டி அது அப்படி, இது இப்படி என்கிறார்கள். அவர்கள் என்னத்தான் தங்கள் சுய ஞானத்தினால் நிரூபித்தாலும் அது தேவனுடைய வார்த்தைக்கு, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசி கள் உபதேசங்களுக்கு மாறுபாடாயிருக்குமானால், அதினின்று விலகுங்கள், உங்களை காத்துக் கொள்ளுங்கள்.

*49.* முடிவாக, காரியத்தின் கடைத் தொகையை கேட் போமாக. பவுல் 1 கொரி 11வது அதிகாரத்தில் ஸ்திரீயின் முக் காடு என கூறியிருப்பது அவள் மேலாடை அல்ல, முக முக் காடு அல்ல, மாறாக தலை முக்காடு (Head covering) ஆகும். 1 கொரி 11:4ஐ வாசித்தால் தன் தலையை மூடிக்கொண்டிருக் கிற புருஷன் (having his head covered) என்றும், 1 கொரி 11:5ஐ வாசித்தால் தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீ யும் (her head uncovered) என எழுதுகிறான். வேதாகமத்தில் மேலாடை, முகமுக்காடு, தலை முக்காடு யாவும் veil என்றே கூறப்பட்டுள்ளது. ஆனால் அவை யாவும் வெவ்வேறு அர்த்தங் களுடன் கூறப்பட்டுள்ளது.

மேலாடை (veiled herself)
முகமுக்காடு (veiled his face)
தலைமுக்காடு (head covered)


1 கொரி 11:5ன்படி ஸ்திரீக்கு அவள் நீண்ட தலைமயிரே அவள் தலை முக்காடு. அவள் ஜெபம் பண்ணுகிற போதோ, அல்லது தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதோ, அல்லது சபை கூடுதலின் வேளையிலோ, அல்லது தேவ சமூகத்திலோ தன்

தலையை தன் சேலை முந்தானையாலோ, அல்லது ஒரு தொப்பி யாலோ அல்லது ஒரு கைக்குட்டையினாலோ மூட வேண்டிய தேவையில்லை. மாறாக அவள் தன் தலைமயிரை நீள வளரவிட்டால் போதும். அவளது நீண்ட தலைமயிரே அவளது தலைமுக்காடு. இதுவே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்ப வருடைய மூல, பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்பு கொடுக்கப் பட்ட உபதேசம். இந்த உபதேசத்திலிருந்து வழுவாதபடி உங்களை காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சி யோடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்த வல்லமையுள்ள நம்மு டைய இரட்சகரான தேவனுக்கு கனமும் மகத்துவமும், வல்லமை யும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்

**சகோ. காலேப் யோசுவா**

S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*

*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260